ISSN: 2582-5518




புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




திங்கள் ❖ ஜனவரி 22, 2024 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 106 ❖ ரூ.10

## சேலத்தில் நடைபெற்ற திமுக இளைஞரணி 2-வது மாநில

# மாநாடு

## மத்திய அமைச்சர் கேட்ட மரியாதையை நான் கொடுத்துவிட்டேன் ஆனால் அவர்கள் நிதியை கொடுக்கவில்லை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு

**சேலம் : ஜன. 22,**

**திமுக இளைஞரணி மாநாட்டை ஒட்டுமொத்த இந்தியாவே உற்றுநோக்குகிறது என சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன் பாளையத்தில் நடைபெற்ற திமுக இளைஞரணி மாநாட்டில் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.**





மாநாட்டில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது: 9 லட்சம் சதுர அடியில் பிரம்மாண்டமாக நடைபெற்ற திமுக இளைஞரணி மாநாடு உலக சாதனையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மாநாட்டை வெற்றி மாநாடாக மாற்றிய அனைத்து நிர்வாகிகளுக்கும் நன்றி. 10 ஆண்டு கால பாஜக ஆட்சிக்கு முடிவு கட்டும் படையை சேலம் மாநாட்டில் இருந்து தொடங்கியுள்ளோம். இளைஞரணி நடத்தும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் பங்கேற்க திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு அழைப்பு விடுக்கப்படும். பிறந்தநாள், திருமண நாளை போன்று சேலம் மாநாட்டை என்னால் மறக்க முடியாது.

மாநில உரிமைகளை பறிப்பதையே மத்திய அரசு முழு நேர வேலையாக செய்து வருகிறது. எடப்பாடி பழனிசாமியின் துணையுடன்தான் மாநில உரிமைகளை மத்திய அரசு பறித்தது. நம்மிடம் அதிகமான வரியை பெற்றுக் கொண்டு நமக்கு நிதியை திருப்பிக் கொடுப்பதே இல்லை. கடந்த 9 ஆண்டுகளில் தமிழ்நாடு மக்கள் செலுத்திய வரி ரூ.5 லட்சம் கோடி, ஆனால் மத்திய அரசு தந்தது ரூ.2 லட்சம் கோடி.

மத்திய நிதி அமைச்சர் கேட்ட மரியாதையை நான் கொடுத்துவிட்டேன்; ஆனால் அவர்கள் நிதியை கொடுக்கவில்லை. எல்லா பட்டப்படிப்புகளுக்கும் நுழைவுத் தேர்வை கொண்டு வர பார்க்கிறார்கள். இன்னும் 2,000 ஆண்டுகள் ஆனாலும் தமிழ்நாட்டில் பாஜகவால் கால்பதிக்க முடியாது. மத்திய அரசை கேள்வி கேட்டால் தமிழ்நாட்டில் அமலாக்கத்துறை, வருமான வரித்துறை, சிபிஐ வரும் என மிரட்டுகின்றனர்.

திமுககாரர்கள் ED-க்கும் பயப்பட மாட்டார்கள்; மோடிக்கும் பயப்படமாட்டார்கள். மத்திய அரசின் மிரட்டல்களுக்கு திமுககாரன் மட்டுமல்ல; திமுககாரன் வீட்டு கைக்குழந்தை கூட பயப்படாது. பாசிஸ்ட்டுகளின் காலம் முடிவுக்கு வரப் போகிறது. இந்தியா முழுவதும் இந்தியா கூட்டணிதான் வெற்றி பெறப் போகிறது.

தமிழ்மொழி எங்கள் உரிமை அல்ல; எங்கள் உயிர். தமிழை அழிக்க நினைத்தால் சேலம் மாநாட்டில் கூடியுள்ள இளைஞர்கள் உயிரை கொடுத்தும் தடுக்க தயாராக இருக்கிறோம். நாடு முழுவதும் காவிச் சாயம் பூச நினைக்கின்ற பாசிஸ்ட்டுகளை வீழ்த்த வேண்டும் என்ற முதல்வரின் லட்சியத்தை நனவாக்குவோம். வரும் தேர்தலில் பாசிஸ்ட்டுகளை விரட்டி அடிக்கப்போவது உறுதி என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

## தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரையில் பிரதமர் மோடி மலர் தூவி வழிபாடு

**தனுஷ்கோடி : ஜன. 22,**

**ராமேஸ்வரத்தில் இருந்து தனுஷ்கோடி சென்றடைந்த பிரதமர் மோடி அங்குள்ள அரிச்சல்முனை கடற்கரையில் மலர்களை தூவி வழிபாடு செய்தார். பின்னர் கோதரண்டராமர் கோயிலில் சிறப்புப் பூஜைகளில் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தார்.**



அயோத்தி ராமர் கோயில் திறப்பு விழா இன்று நடைபெறுகிறது. இதையொட்டி பிரதமர் நரேந்திர மோடி 11 நாட்கள் விரதம் இருந்து வருகிறார். மேலும், பல்வேறு ஆன்மிக தலங்களுக்கும் சென்று வழிபாடு நடத்தி வருகிறார். அந்த வகையில் தமிழகத்துக்கு 3 நாள் பயணமாக பிரதமர் சென்னை வந்தார். பின்னர் நேரு உள்விளையாட்டு அரங்கில் கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைத்தார். இரவில் ஆளுநர் மாளிகையில் தங்கினார்.

பயணத்தின் இரண்டாம் நாளில் சென்னையிலிருந்து ஸ்ரீரங்கம் சென்ற அவர், அங்கு ரங்கநாதர் கோயிலில் சாமி தரிசனம் செய்தார். பின்னர் அங்கிருந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை ராமேஸ்வரம் சென்ற அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. ராமேசுவரம் ராமநாத சுவாமி கோயிலில் உள்ள 22 தீர்த்த கிணறுகளில் பிரதமர் மோடி புனித நீராடினார். கோயில் சார்பில் பூரண கும்ப மரியாதை செய்து பிரதமருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த நிலையில், நேற்று ராமேஸ்வரத்தில் இருந்து தனுஷ்கோடி சென்ற பிரதமர மோடி. அங்குள்ள கடற்கரையில் மலர்கள், துளசி இலைகளை தூவி வழிபாடு செய்தார். பின்னர் அங்கு நாற்காலியில் அமர்ந்து சிறிது நேரம் தியானம் செய்த அவர், அங்குள்ள புனித ஸ்தூபிக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

அரிச்சல்முனை கடற்கரையில் இருந்துதான் இலங்கைக்கு ராமர் பாலம் கட்டப்பட்டதாக ராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது. இன்று அயோத்தியில் ராமர் கோயில் கும்பாபிஷேகம் நடைபெற உள்ள நிலையில், பிரதமர் மோடி அரிச்சல்முனை சென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## அயோத்தியில் நீர், நிலம், வான் பகுதியில் பாதுகாப்பு தீவிரம் உத்திரபிரதேச அரசுக்கு மத்தியப் படைகள் உதவி

**புதுடெல்லி : ஜன. 22,**

**இன்று திறக்கப்படும் ராமர் கோயிலின் விழாவுக்காக அயோத்தியின் நிலம், நீர் மற்றும் வான் பகுதியில் பாதுகாப்பு தீவிரமாகி உள்ளது. இதற்கான பொறுப்பிலுள்ள உ.பி அரசுக்கு, மத்திய அரசின் பாதுகாப்புப் படைகள், தேசிய உளவு அமைப்புகளான ''ரா' மற்றும் 'ஐபி' உள்ளிட்ட பாதுகாப்புப் படை பிரிவினர் உதவிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.**



இந்த ஏற்பாடுகள் டெல்லியில் வெளிநாடுகளின் அதிபர்களுடன் நடைபெற்ற சர்வதேச ஜி20 மாநாடு போன்ற நிகழ்ச்சிகளை மிஞ்சும் அளவில் அமைந்துள்ளன. இந்நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் நாட்டின் பல முக்கியத் தலைவர்களும், ஆன்மிகவாதிகளும் கலந்து கொள்கின்றனர். இதற்காக, உ.பி அரசுடன் மத்திய அரசும் இணைந்து ஆலோசித்து பலவகையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதில், அயோத்தியின் நிலம், நீர் மற்றும் வானம் ஆகியவைகளும் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இது குறித்து அயோத்தி பகுதியின் ஐஜி பிரவீன் குமார் கூறும்போது, "உ.பி அரசு சார்பில் மாநில காவல்துறையினர், சிறப்புப் படைகளான பிஏசி, எஸ்டிஎப், ஏடிஎஸ், யுபிஎஸ்எஸ்எப் ஆகியோர் ஏராளமான எண்ணிக்கையில் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு முக்கிய அழைப்பாளர்களுக்கும் பாதுகாப்பு உறுதிசெய்ய க்யூ ஆர் கோட் அளிக்கப்பட்டுள்ளது. உ.பி.,யின் 75 மாவட்டங்களிலிருந்தும் காவல்துறை அதிகாரிகள் பலரும் அயோத்தியின் சிறப்புப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இதில் 100 டிஎஸ்பிக்கள், 325 ஆய்வாளர்கள், 800 உதவி ஆய்வாளர்கள் இடம் பெற்றுள்ளனர்" எனத் தெரிவித்தார்.

முக்கியவிருந்தினர்களின் பாதுகாப்புக்காக 3 டிஐஜி, 17 எஸ்பி, 40 ஏஎஸ்பி, 82 டிஎஸ்பி, 90 ஆய்வாளர், 1,000 காவலர்கள் மற்றும் பிஏசியின் 4 படைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இவர்கள் அனைவருக்கும் உதவும் கைடுகளாக அயோத்தியைப் பற்றி முழுவதுமாக அறிந்த 250 காவலர்களும் பணியமர்த்தப்பட்டு உள்ளனர்.

உ.பி அரசின் இந்தப் பாதுகாப்புப் பணியில் மத்திய அரசின் பாதுகாப்புப் படைகள் மற்றும் உளவு அமைப்புகளும் உதவ உள்ளன. சிஆர்பிஎப் படைகளும், உளவுப் பணிக்காக சர்வதேச இந்திய உளவு அமைப்பான ரா (ரிசர்ச் அண்ட் அனலைஸ் விங்) மற்றும் மத்திய உளவு அமைப்பான ஐபி (இன்டலிஜென்ஸ் பீரோ) ஆகியவை அமர்த்தப்பட்டுள்ளன.

இவர்கள் அனைவரும் நிலப்பகுதியின் பாதுகாப்பில் இருப்பர். அயோத்தியின் சரயு நதி வழிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நீர் பாதுகாப்புக்காக என்டிஆர்எப் (தேசிய பேரிடர் மீட்பு படை) சரயுவின் கரைகளில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

அயோத்தியின் 10,715 பகுதிகளில் சிசிடிவி கேமராக்கள் ஐடிஎம்எஸ் கருவி மூலமாகப் பொருத்தப்பட்டுள்ளன. அயோத்தியைச் சுற்றிலும் ஐந்து கி.மீ தொலைவில் டிரோன்கள் அனுமதியின்றி பறக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பை மீறிப் பறப்பதைக் கண்காணிக்க டிரோன் எதிர்ப்பு கருவிகள் நீர், நிலம், வானம் ஆகிய பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ளன. இவை அனைத்தின் பாதுகாப்பிலும் ஏஐ (ஆர்டிபியுஷியல் இண்டலிஜன்ஸ்) தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது.

## ராகுல் காந்தியின் யாத்திரை வாகனங்கள் மீது தாக்குதல் : கார்கே கடும் கண்டனம்

**புதுடில்லி : ஜன. 22,**

**அசாமில் ராகுல் காந்தியின் நியாய யாத்திரை வாகனங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**





மக்களவைத் தேர்தல் விரைவில் நடைபெற உள்ள நிலையில், காங்கிரஸ் கட்சி சார்பில் மணிப்பூரில் இருந்து மகாராஷ்டிரா வரை சுமார் 6,700 கிலோமீட்டர் தூரத்திற்கு பாரத் ஜோடோ நியாய யாத்திரை என்ற பெயரில் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ராகுல் காந்தி நடைபயணம் மேற்கொண்டு வருகிறார். நாகாலாந்து, அசாம், மேகாலயா, மேற்குவங்கம், பீகார், ஜார்க்கண்ட், ஒடிசா, சத்தீஸ்கர், உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா உள்ளிட்ட 15 மாநிலங்களில், 66 நாட்கள் நடைபெறும் இந்த பேரணியில், 110 மாவட்டங்கள் வழியாக ராகுல் காந்தி பயணம் மேற்கொள்ள உள்ளார்.

மணிப்பூர், நாகாலாந்தில் யாத்திரை முடிவடைந்ததை அடுத்து, கடந்த ஜனவரி 18ம் தேதி ராகுல் காந்தியின் யாத்திரை அசாம் மாநிலத்திற்கு வருகை தந்துள்ளது. இம்மாநிலத்தில் 8 நாட்கள் ராகுல் காந்தி யாத்திரை மேற்கொள்ள உள்ளார். இந்நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு மர்ம நபர்கள் சிலர் ராகுல் காந்தியின் யாத்திரைக்கு பயன்படுத்தப்பட்டு வந்த வாகனங்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். மேலும் பேரணிக்காக வைக்கப்பட்டிருந்த பேனர்களையும் கிழித்து சேதப்படுத்தியுள்ளனர்.

இந்த சம்பவத்தில் ஈடுபட்டது பாஜகவின் இளைஞர் அமைப்பான பாரதிய ஜனதா யுவ மோர்சா அமைப்பினர் என்று காங்கிரஸ் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

இந்நிலையில் இந்த தாக்குதல் சம்பவத்திற்கு காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள அவர், "இந்திய மக்களுக்கு அரசியலமைப்பு சட்டம் உத்தரவாதம் அளித்துள்ள ஒவ்வொரு உரிமையையும் நீதியையும் காலில் போட்டு பாஜக மிதிக்கிறது. அசாமில் பாஜக அரசு கையாண்ட இந்த தாக்குதல் மற்றும் மிரட்டல் தந்திரத்தால் காங்கிரஸ் கட்சி அச்சமடைந்து விடாது. இந்த பாஜக கைக்கூலிகள் மீது காங்கிரஸ் கட்சி உரிய சட்ட நடவடிக்கை எடுக்கும். ராகுல் காந்தியின் யாத்திரையை யாராலும் தடுக்க முடியாது." என்று பதிவிட்டுள்ளார்.

## "திமுக இளைஞரணி மாநாட்டை திசைதிருப்ப திட்டமிட்ட வதந்தி" – நிர்மலா சீதாராமனுக்கு சேகர்பாபு பதில்

**சென்னை : ஜன. 22,**

**"தமிழ்நாட்டில் உள்ள கோயில்களில் ராமர் பெயரில் பூஜை செய்யவோ, அன்னதானம் வழங்கவோ, பிரசாதம் வழங்கவோ பக்தர்களுக்கு எந்த தடையையும் அறநிலையத்துறை விதிக்கவில்லை. முற்றிலும் உண்மைக்குப் புறம்பான, உள்நோக்கம் கொண்ட பொய்ச் செய்தியை, உயர்ந்த பதவியில் உள்ள மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் போன்றோர் பரப்புவது வருத்தத்தகுறியது" என்று இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு பதிலளித்துள்ளார்.**



இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில், "சேலத்தில் எழுச்சியோடு நடைபெற்று வரும், திமுக இளைஞரணி மாநாட்டை திசைதிருப்புவதற்காக திட்டமிட்ட வதந்தி பரப்பப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள கோயில்களில் ராமர் பெயரில் பூஜை செய்யவோ, அன்னதானம் வழங்கவோ, பிரசாதம் வழங்கவோ பக்தர்களுக்கு எந்த தடையையும் அறநிலையத்துறை விதிக்கவில்லை. முற்றிலும் உண்மைக்குப் புறம்பான, உள்நோக்கம் கொண்ட பொய்ச் செய்தியை, உயர்ந்த பதவியில் உள்ள மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் போன்றோர் பரப்புவது வருத்தத்தகுறியது" என்று அவர் பதிவிட்டுள்ளார்.

முன்னதாக, 'தமிழகத்தில் ராமரின் பெயரில் பூஜை, பஜனை, பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்க அனுமதிக்கப்படுவதில்லை. தனியாருக்கு சொந்தமான கோயில்களில் இந்நிகழ்ச்சிகள் நடத்துவதையும் போலீஸார் தடுத்து வருகின்றனர். தமிழக அரசின் இந்த இந்து மத விரோத, வெறுக்கத்தக்க செயலை வன்மையாக கண்டிக்கிறேன்" என்று மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருந்தார்.

## ராமர் கோயில் திறப்பு : தமிழகத்தில் இன்று வீடுகள், குடியிருப்புகளில் தீபம் ஏற்றி வழிபட ஆளுநர் ரவி அழைப்பு

**சென்னை : ஜன. 22,**

**"இன்று ஜனவரி 22-ம் தேதி அயோத்தியில் பால ராமர் பிராண பிரதிஷ்டையுடன் தேசம் ஒரு அற்புதமான ராமர் கோயிலை பெறும். இந்த வரலாற்றுப் பொன்னாளை ஒவ்வொரு வீட்டின் முன்பும் தீபம் ஏற்றி ஒட்டுமொத்த தேசமும் கொண்டாடும். தமிழகத்தில் சகோதர, சகோதரிகள் அனைவரும் தங்கள் வீடுகள் மற்றும் குடியிருப்புகள் முன்பு தீபம் ஏற்றி இந்நாளை கொண்டாடி வழிபடுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்று தமிழக ஆளுநர் ஆர். என்.ரவி கூறியுள்ளார்.**



இதுதொடர்பாக தமிழ்நாடு ராஜ்பவன் எக்ஸ்தளப்பக்கத்தில், "நமது தேசம் இப்போதெல்லாம் ராம பக்தியில் மூழ்கியுள்ளது. நமது தமிழ்நாட்டு சகோதர, சகோதரிகள் மத்தியில் இதை நானே பார்த்து உணர்ந்திருக்கிறேன். 'ஸ்ரீ ராமர்' பாரதத்தின் தேசிய அடையாளம். இன்று அயோத்தியில் பால ராமர் பிராண பிரதிஷ்டையுடன் தேசம் ஒரு அற்புதமான ராமர் கோயிலை பெறும். இந்த வரலாற்றுப் பொன்னாளை ஒவ்வொரு வீட்டின் முன்பும் தீபம் ஏற்றி ஒட்டுமொத்த தேசமும் கொண்டாடும். தமிழகத்தில் சகோதர, சகோதரிகள் அனைவரும் தங்கள் வீடுகள் மற்றும் குடியிருப்புகள் முன்பு தீபம் ஏற்றி இந்நாளை கொண்டாடி வழிபடுமாறு கேட்டுக்கொள்கிறேன்", என்று அவர் பதிவிட்டுள்ளார்.

முன்னதாக, உத்தரப்பிரதேச மாநிலம் அயோத்தியில் கட்டப்பட்டுள்ள பிரம்மாண்ட ராமர் கோயிலில் இன்று கும்பாபிஷேக விழா நடைபெறவுள்ளது. நண்பகல் 12.20 மணி அளவில் கோயில் கருவறையில் மூலவரான குழந்தை ராமர் சிலை வைக்கப்படுகிறது. இந்த நிகழ்வில் பங்கேற்க, இந்தியா முழுவதும் உள்ள அரசியல் கட்சித் தலைவர்கள், சினிமா, விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சார்ந்த பிரபலங்கள் பலருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ராமர் கோயில் திறப்பு விழா : அயோத்தி சிறப்பு யாகத்தில் கங்கனா ரனாவத் பங்கேற்பு

**அயோத்தி : ஜன. 22,**

**ராமர் கோயில் திறப்பு விழா இன்று நடைபெறுவதையொட்டி அயோத்தி நகர் சென்ற நடிகை கங்கனா ரனாவத், அங்கு நடைபெற்ற சிறப்பு யாகத்தில் பங்கேற்றார்.**



உத்தரப் பிரதேச மாநிலம் அயோத்தியில் கட்டப்பட்டுள்ள பிரம்மாண்ட ராமர் கோயிலில் இன்று கும்பாபிஷேக விழா நடைபெறவுள்ளது. நண்பகல் 12.20 மணி அளவில் கோயில் கருவறையில் மூலவரான குழந்தை ராமர் சிலை வைக்கப்படுகிறது. இந்த நிகழ்வில் பங்கேற்க, இந்தியா முழுவதும் உள்ள அரசியல் கட்சித் தலைவர்கள், சினிமா, விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சார்ந்த பிரபலங்கள் பலருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தமிழகத்திலிருந்து நேற்று காலை நடிகர் ரஜினிகாந்த் விமானம் மூலம் அயோத்தி புறப்பட்டுச் சென்றார். நடிகர் தனுஷ் லக்னோவிலிருந்து அயோத்தி சென்றுள்ளார். அந்த வகையில் பாலிவுட் நடிகை கங்கனா ரனாவத் நேற்று காலை அயோத்தி சென்றடைந்தார். ராமர் கோயில் கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு நேற்று நடைபெற்ற சிறப்பு யாகம் ஒன்றில் அவர் பங்கேற்றார். மேலும் சுவாமி ராமபத்ராச்சாரியாரை சந்தித்தது குறித்தும் தனது சமூக வலைதள பக்கத்தில் கங்கனா பதிவிட்டுள்ளார்.

தனது இன்ஸ்டா பக்கத்தில் கங்கனா கூறியிருப்பதாவது: மதிப்புக்குரிய ஸ்ரீ ராமபத்ராச்சார்யா ஜி அவர்களைச் சந்தித்து அவரது ஆசிகளைப் பெறும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அவர் நடத்திய அனுமான் சிறப்பு யாகத்தில் நான் பங்கேற்றேன். புனித நகரமான அயோத்தியில், ஸ்ரீ ராமரின் வரவேற்பு எங்கும் நிறைந்து காணப்படுகின்றன. இன்று அயோத்தி மன்னர்கள் நீண்ட வனவாசம் முடிந்து வீடு திரும்புகிறார்கள்" என்று கங்கனா அப்பதிவில் கூறியுள்ளார்.

# இன்று

## 22-1-24

| சோபகிருது தை 8 | JAN - MON திங்கள் | ரஜப் 10 |
|---|---|---|
| | | 022 / 344 |

| நல்லநேரம் | | கௌரி நல்ல நேரம் | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 6.30-7.30 | 9.30-10.30 | 07.30 | 01.30 | 10.30 |
| மாலை | 4.30-5.30 | 7.30-8.30 | 09.00 | 03.00 | 12.00 |

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்க வேண்டிய அடிப்படை நற்குணம் தனக்குத்தானே உண்மையாக இருப்பது




# கடையநல்லூர் ஒன்றிய கழக சார்பாக சேலம் திமுக இளைஞரணி 2-வது மாநில மாநாட்டிற்கு சென்றனர்



**கடையநல்லூர் : ஜன. 22,**

**தென்காசி மாவட்டம், கடையநல்லூர் ஒன்றிய கழக சார்பாக சேலம் திமுக இளைஞரணி 2-வது மாநில மாநாட்டிற்கு முன்னாள் திமுக மாவட்ட செயலாளர் மா.செல்லத்துரை தலைமையில், நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபீபூர் ரஹ்மான், பண்பொழி சேர்மன் ராஜராஜன், வடகரை ஷேக் தாவுது, துணை சேர்மன் ராசையா முன்னிலையில் மாநாட்டிற்கு புறப்பட்டு சென்றனர்.**

இதில் நகர அவைத் தலைவர் பெட்டி முருகன், ஒன்றியசெயலாளர் பா.சுரேஷ், நகர துணைச்செயலாளர்கள் மஸ்தான் அலி, காசி, மாவட்ட பிரதிநிதிகள் தம்புராஜ், ராமச்சந்திரன், சிட்டி திவான், நகர பொருளாளர் மாவடி நெடுமாறன், வார்டு செயலாளர்கள் செய்யது மசூது, முருகையா, கணேசன், மயில்சாமி, கண்ணன், திரிகூடபுரம் சுப்பிரமணியன், ஒன்றிய பிரதிநிதி தங்கப்பாண்டி, ரவி, பெரியசாமி, ஹனிபா, சலீல், அசன், மாரித்துரை நகர கிளைச் செயலாளர் சுகுமார், மணிகண்டன், காளி, தினேஷ், சுடலைமுத்து, வீரபுத்திரன், முருகானந்தம், பாலசுப்ரமணியன், ராமையா, மாசான முத்து, அழகிரி, எஸ்.எஸ்.சுப்பிரமணியம், செல்வம், அண்ணாதுரை, கருணாநிதி, சங்கரலிங்கம், அமானுல்லா, ஹபிபுல்லா, அப்துல் காதர், மீராசா, மொய்தின் பிள்ளை, எம்.சி. பீர் மைதீன், செய்யது சுல்தான், துரைசாமியாபுரம் கொய்யா என்ற குற்றாலிங்கம், நல்லையா ஆகியோர் மாநாட்டிற்கு புறப்பட்டு சென்றனர்.

# மேலூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் தமிழ்மொழி பற்றிய விழிப்புணர்வு தமிழ்க்கூடல் நிகழ்ச்சி



**புதுக்கோட்டை : ஜன. 22,**


**புதுக்கோட்டை மாவட்டம், மேலூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் தமிழ்மொழி பற்றிய விழிப்புணர்வு தமிழ்க்கூடல் நிகழ்ச்சி நடைபெற்றது.**

இந்த நிகழ்ச்சிக்கு மேலூர் அரசு உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் பழனிவேல் தலைமை தாங்கினார். பள்ளி ஆசிரியர் விஜயகுமார் நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்தார். மாவட்ட பேரிடர்கால நண்பர் எம்.சி.மனோகரன் வரவேற்புரையாற்றினார். நிகழ்ச்சியில் மாணவ, மாணவிகள் பல்வேறு தமிழ் சார்ந்த தலைப்புகளில் பேசினர். மாணவிகளின் கலை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

விழாவில் சிறப்பு அழைப்பாளராக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி சமூக மருத்துவம் மற்றும் நோய் தடுப்பு துறை முதன்மை குடிமை மருத்துவர் கே.சரவணன் கலந்து கொண்டு செந்தமிழும் நாபழக்கம் என்ற தலைப்பில் தமிழ் மொழி தோன்றிய வரலாறு, தமிழ் மொழியின் சிறப்பு, தமிழ் வாழ்வியலில் எப்படி வழிகாட்டுகிறது என்பதையும், இதில் பண்டை தமிழரின் வாழ்வியல், திருக்குறளின் சிறப்பு, நாலடியார், ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், திருவாசகம் போன்ற நூல்களில் கூறப்பட்ட கருத்துகளையும் மாணவர்களுக்கு எடுத்துக்கூறினார். மேலும் மேல்நாட்டு அறிஞர்களான வீரமாமுனிவர், ஜி.யு.போப், கால்டுவெல் நம் தமிழுக்கு ஆற்றிய சிறந்த பணிகளை எடுத்துக்கூறினார். முடிவில் மாணவ மாணவிகள் தமிழை நேசிக்கவும் போற்றவும் தமிழ் மொழிக்கு தொண்டு செய்ய வேண்டும் என்ற உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். பெற்றோர் ஆசிரியர் கழக பொறுப்பாளர் எம்.ராஜேந்திரன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டனர். விழா முடிவில் பள்ளி தமிழாசிரியை மலர்விழி நன்றி கூறினார்.



தென்காசி மாவட்டம், கடையநல்லூர் யூனியனுக்கு உட்பட்ட வேலாயுதபுரம் கிராமத்தில் ஸ்ரீ சிவசக்தி விநாயகர் கோவிலில் மஹா கும்பாபிஷேக விழாவும், மாபெரும் அன்னதான நிகழ்ச்சியும் தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் திமுக செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினருமானமா. செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபீபூர் ரகுமான், நகர் மன்ற உறுப்பினர்கள் சிட்டி திவான், முகைதீன் கனி, முருகானந்தம், நல்லையா, மாணிக்கம், செல்வம், மயில்சாமி, இசக்கி மற்றும் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



சேலத்தில் நடைபெற்ற திமுக இளைஞர் அணி 2-வது மாநில மாநாட்டிற்கு தென்காசி மாவட்டம், கடையநல்லூர் நகர கழகம் சார்பாக தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வே.ஜெயபாலன் ஆணைக்கிணங்க, திமுக நகர செயலாளர் எஸ். அப்பாஸ் தலைமையில், நகரக் கழக அலுவலகத்தில் இருந்து சேலம் மாநாட்டிற்கு திரளான தொண்டர்கள் புறப்பட்டுச் சென்றனர்.

# ராம பக்தர்கள் தங்க அயோத்தியில் நவீன கூடாரங்களுடன் தற்காலிக நகரங்கள் : இந்த கூடாரங்களின் ஆயுட்காலம் சுமார் 10 ஆண்டுகள்



**புதுடெல்லி : ஜன. 22,**

**அயோத்தியின் ராமர் கோயில் விழாவுக்கு வரும் ராம பக்தர்கள் தங்க சிறப்பு வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. வாரணாசியைப் போல் நவீன கூடாரங்களுடன் தற்காலிக நகரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.**

பிரதமர் நரேந்திர மோடி கலந்துகொள்ளும் ராமர் கோயில் விழாவுக்கு சுமார் 11,000 பேர் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்க உள்ளனர். இவர்களுடன் உள்ளூர் மற்றும் உ.பி வாசிகளும் கலந்துகொள்ள உள்ளனர். இவர்கள் அனைவரும் தங்கும் அளவுக்கு அயோத்தியில் இன்னும் வசதியான ஓட்டல்களும், விடுதிகளும் இல்லை. எனவே, இவர்களுக்காக நவீன கூடாரங்கள் அமைத்து தற்காலிக நகரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இப்பணியில் ஸ்ரீ ராம ஜென்ம பூமி அறக்கட்டளை மற்றும் அயோத்யா வளர்ச்சிக் கழகம் ஈடுபட்டுள்ளன. இவை, அயோத்தியின் மஜஹா குப்தா காட் எனும் 20 ஏக்கர் நிலப்பகுதியில் அமைக்கப்படுகிறது. மற்றொன்று பிரம்ம குண்ட் பகுதியிலும், மூன்றாவது ராம் கதா பூங்காவிலும் அமைக்கப்படுகிறது. நான்காவதாக 25 ஏக்கர் நிலப் பகுதியில் பாக்பிஜைஸி எனும் இடத்தில் பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டுள்ளது.

இத்துடன் கர்சேவக்புரம் மற்றும் மணிராம்தாஸ் சாவ்னி ஆகிய பகுதிகளிலும் நவீன கூடார நகரங்கள் இரண்டு அமைக்கப்பட்டுள்ளன. உ.பி-யில் இதுபோல் நவீன கூடாரங்கள் முதன்முறையாக பிரதமர் மோடியின் மக்களவை தொகுதியான வாரணாசியின் கங்கை கரையில் அமைந்தன. இவற்றில்தான் காசி தமிழ் சங்கமம்-2 வந்தவர்களும் தங்க வைக்கப்பட்டிருந்தனர். இவற்றைவிட மேலும் பல வசதிகளும் அயோத்தியில் கூடாரங்கள் சிறுசிறு நகரங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

இதன் இறுதிப் பணியும் முடியும் நிலையில் உள்ளன. இவற்றில் லக்சுரி மற்றும் செமி லக்சுரி என இரண்டு வகைகளில் உள்ளவற்றில் இருவர் தங்கும் வசதி செய்யப்பட்டுள்ளன. இவை அனைத்திலும் அவத் மற்றும் பனாரஸி பகுதிகளின் சைவ உணவு வகைகள் பறிமாறப்பட உள்ளன. இதற்காக ஆங்காங்கே பல பிரம்மாண்டமான சமையலறைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில், பிரபல சமையல் கலைஞர்கள் தலைமையில் சிறப்பு சமையல் குழுக்கள் பணியாற்ற உள்ளனர்.

ஆன்மிக வழியில் அலங்கரிக்கப்பட்ட கூடாரத்தில் தற்போது இங்கு நிலவும் கடும் குளிரை தாங்கும் வசதியும் செய்யப்பட்டுள்ளது. கூடாரங்களின் முன்பாக திறந்தவெளியில் பாதுகாப்பான முறையில் தீமூட்டி குளிரை சமாளிக்கவும் ஏற்பாடுகள் உள்ளன.

இந்த கூடார நகரங்களில் ராமர் மீதான கதைகளும், கலாசார நடன மற்றும் இசை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவர்கள் ராமர் கோயில் மற்றும் அயோத்தியின் இதரப் பகுதிகளுக்கும் சென்று வர வசதியாக 50 மின்சார பேருந்துகளும், 200 இ-ரிக்ஷாக்களும் விடப்பட்டுள்ளன.

அயோத்தி நகரின் சுற்றுலா பகுதிகளுடன் வரைபடத்தை அறிய தனியாக ஒரு கைப்பேசி செயலியும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த செயலி ஆங்கிலம், இந்தி ஆகியவற்றுடன் தமிழ் உள்ளிட்ட அட்டவணையில் இடம்பெற்ற அனைத்து இந்திய மொழிகளிலும் இயங்கும் வகையில் உள்ளது.

ராமர் கோயில் திறப்பு விழா முடிந்த பின்பும் தொடர்ந்து அயோத்திக்கும் பலலட்சம் பக்தர்கள் வருகை எதிர்பார்க்கப்படுகிறது. ஜனவரி 25 முதல் மார்ச் 25 வரை பாஜக சார்பில் மட்டும் 11 கோடி பக்தர்கள் ரயில் மூலம் அயோத்திக்கு வரவுள்ளனர்.

இதன் காரணமாக, இந்த நவீன கூடாரங்கள் அயோத்தியில் தங்கும் நிரந்தரமான வசதிகள் வரும் வரை நீட்டிக்க உள்ளன. இந்த கூடாரங்களின் ஆயுட்காலம் சுமார் 10 ஆண்டுகள் எனக் கருதப்படுகிறது.

# 'மக்களுடன் முதல்வர்' திட்ட முகாம் : மக்களின் விருப்பம்



**கள்ளக்குறிச்சி : ஜன. 22,**

**பொது மக்களின் மனுக்கள் மீது 30 நாட்களில் தீர்வு காணும் விதமாக, வருவாய், நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, ஆதி திராவிடர் நலன், சிறுபான்மையினர் நலன், சமூக நலன், மின்சாரம், தொழிலாளர் நலன் உள்ளிட்ட 13 முக்கிய துறைகள் அடங்கிய 'மக்களுடன் முதல்வர்' என்ற திட்டத்தை தமிழக முதல்வர் கடந்த டிச. 18-ம் தேதி கோவையில் தொடங்கி வைத்தார்.**

மாநிலம் முழுவதும் மொத்தம் 1,745 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, முகாம்கள் மூலமாக பொது மக்களிடம் இருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த மனுக்கள் மீது ஜன. 17-ம் தேதிக்குள் தீர்வு கண்டு, அதற்கு அடுத்த நாள் முதல் மனுதாரார்களுக்கு தீர்வு அல்லது அதற்கான பதிலளிக்க வேண்டும் என்று இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதற்காக கடந்த மாதம் இறுதி தொடங்கி இம்மாதத்தின் முதல் இரு வாரங்களில் அரசு ஊழியர்கள் நேரம் காலம் பாராமல் அதிகவனம் செலுத்தி வந்தனர்.

இருப்பினும் மனுக்கள் மீதான நடவடிக்கை எடுப்பதற்கு போதிய அளவு மனிதத் திறன் இல்லை. பணியாளர் பற்றாக்குறை நிலவுவதால், மொத்தப் பணிச்சுமையும் குறைந்த அளவிலான ஊழியர்கள் மீதே திணிக்கப் படுகின்றன. இதனால் மனஅழுத்தம் ஏற்படுவதாக அரசு ஊழியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மாவட்ட நிலையில் உள்ள அதிகாரி ஒருவர் கூறுகையில், "பொறுப்பு அலுவலர் என்ற முறையில் ஊழியர்களை பணி செய்ய வைக்க முடியவில்லை. டிசம்பர் 18-ம் தேதி தொடங்கிய திட்டத்தை ஒரு மாதத்தில் முடிக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது. ஜனவரி மாதம் அதிக விடுமுறை நாள் வந்தது. பணியாளர்கள் பலர் விடுமுறையை பயன்படுத்துகின்றனர்.


நாங்களோ ஆட்சியரிடம் நேரடியாக பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். பணியாளர்களிடம் ஓரளவுக்குத் தான் அழுத்தம் கொடுக்க முடியும். அவர்கள் தொடர் மருத்துவ விடுப்பு எடுத்து விட்டால் அந்த பணிச்சுமையும் என்னை வந்து சேரும்" என்று தெரிவிக்கிறார்.

"இது போன்ற சிறப்பு முகாம்களை நடத்தும் போது, அதற்குரிய மனிதத் திறனை கொடுக்காமல் மொத்தப் பணிச்சுமையையும் ஒரு சிலரிடமே கொடுத்தால் என்ன செய்வது? இரவு பகல் பாராமல் வேலை செய்கிறோம். அதற்குரிய பலனாவது கிடைக்குமா என்றால் அதுவும் இல்லை" என்று இந்த முகாம்களில் முன்நின்ற அரசு ஊழியர்கள் பலர் ஆதங்கப்படுகின்றனர்.

இது தொடர்பாக கள்ளக்குறிச்சி மாவட்டத்துக்கான தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கச் செயலாளர் மகாலிங்கம் கூறுகையில், "தமிழக முதல்வரின் இத்திட்டம் வரவேற்கக் கூடியதே. நீண்ட நாளாக இருக்கும் பல பிரச்சினைகளுக்கு இங்கு தீர்வு கிடைக்கிறது. அதே நேரத்தில் மனிதத் திறன் குறைவாக உள்ளதை அரசு கவனத்தில் கொண்டால் இதுபோன்ற முகாம்களை சிறப்பாக நடத்தலாம். இது போன்ற திட்டங்களுக்கென மாநிலம் முழுவதும் துறைகள் வாரியாக புதிய நிரந்தரப் பணியாளர்கள் நியமனம் செய்ய வேண்டும். அப்போது தான் நடப்பு பணி பாதிக்கப்படாது" என்று தெரிவிக்கிறார்.

கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் நடைபெற்ற இந்த முகாம்களில் இருந்து பெறப்பட்ட பல மனுக்களுக்கு இந்த குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் தீர்வு காண முடியவில்லை என்பதை களத்தில் கண்கூடாக பார்க்க முடிகிறது. அரசு ஊழியர்கள் சொல்வது போல கூடுதல் பணியாளர்களை நியமித்து, முறையே திட்டமிட்டு செய்தால் மட்டுமே இதுபோன்ற சிறப்பு முகாம்கள் மக்களுக்கு பயனளிக்கும். அதை விட்டு, இது போன்ற சிறப்பு முகாம்களை வெவ்வேறு பெயர்களில் தொடர்ந்து நடத்தி வரும்பட்சத்தில், ஒரு இடத்தில் கொடுத்த மனுவை மற்றொரு இடத்தில் கொடுத்து, மனுதாரர்களை தேவையற்ற அலைக்கழிப்புக்கு ஆட்படுத்தும்.

நீண்ட நாட்களாக பிரச்சினைகள் தீராமல் இருந்து வந்து, இந்த முகாமில் தீர்வு கிடைத்து விடும் என்று நம்பி வரும் பொது மக்களிடையே இது மேலும் மனஉளைச்சலை ஏற்படுத்தவே வழிவகுக்கும். நல்ல திட்டங்களை கொண்டு வரும் அரசு, அதை நல்ல முறையில் செயல்படுத்த வேண்டும் என்பதே மக்களின் விருப்பம். நம் விருப்பமும் அதுவே.




தென்காசி மாவட்டம், கடையநல்லூர் நகராட்சி பகுதி 1-வது வார்டு குமாந்தாபுரத்தில் அருள்மிகு ஸ்ரீ காளியம்மன் திருக்கோவிலில் பாரதிய ஜனதா கட்சி சார்பாக உழவாரப்பணி நடைபெற்றது. நிகழ்ச்சியில் பி.கே.எஸ். பி. ரேவதி பாலீஸ்வரன், கடையநல்லூர் 1-வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் பா.ராஜா நரேஷ்ஷர்மா, பா.ராஜா நிகேஷ் ஷர்மா, பா.மஹாதிஹாஸ்ரீ மற்றும் பிஜேபி மாவட்ட நிர்வாகி பாலீஸ்வரன், சக்தி கேந்திரா பொறுப்பாளர் அ.குமார் செல்வி ஆகியோர் கலந்துகொண்டு காளியம்மன் கோவிலில் உழவாரப் பணியில் ஈடுபட்டனர்.



மதுரை வசந்த நகர் மீனாட்சி மில் காலணியில் விக்கி கார்ஸ் அண்ட் ஆல் இண்டியா ட்ரான்ஸ்போர்ட் புதிய நிறுவனத்தின் திறப்பு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் எம்.ஏ.சி.ஏ கௌரவ நிறுவனத் தலைவர் லயன் கல்லாணை திறந்து வைத்து குத்து விளக்கு ஏற்றி வைத்தார். இந்நிகழ்வில் எம்.ஏ.சி.ஏ சட்ட ஆலோசகர் லயன் ராஜதுரை, கௌரவ ஆலோசகர் சந்தோஷ் சுப்பிரமணியன், எம்.ஏ.சி.ஏ கௌரவ ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீராம், தலைவர் மகேஷ், செயலாளர் பரமேஸ்வரன், பொருளாளர் நவநீதகிருஷ்ணன், விருமாண்டி மற்றும் எம்.ஏ.சி.ஏ பொதுக்குழு செயற்குழு உறுப்பினர்கள், டிரான்ஸ்போர்ட் நண்பர்கள், மதுரையின் முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். விக்கிகார்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் விக்கி என்ற அஜித் அனைவரையும் வரவேற்று பொன்னாடை போற்றி கௌரவித்தார்.

# சென்னையில் கொக்கைன் விற்பனை : 3 நைஜீரியர்கள் கைது போதைப் பொருள், பணம் பறிமுதல்



**சென்னை : ஜன. 22,**

**சென்னை அமைந்தகரை பகுதியில் கொக்கைன் போதைப்பொருட்கள் பதுக்கி வைத்து விற்பனை செய்த நைஜீரியா நாட்டைச் சேர்ந்த 1 பெண் உட்பட 3 பேரை போலீஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடம் 1 கிலோ கொக்கைன், ரொக்கம் ரூ.2 லட்சம் மற்றும் 6 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.**

இது தொடர்பாக காவல்துறை தரப்பில் கூறியிருப்பதாவது: சென்னை பெருநகரில் "போதை தடுப்புக்கான நடவடிக்கை" மூலம் கஞ்சா மற்றும் போதை பொருட்கள் கடத்தி வருபவர்களையும், விற்பனை செய்பவர்களையும் கண்டறிந்து கைது செய்ய சென்னை பெருநகர காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர், உத்தரவிட்டதின்பேரில், காவல் ஆய்வாளர்கள் தலைமையிலான காவல் துறையினர் தீவிரமாக கண்காணித்து, கஞ்சா மற்றும் போதை பொருட்கள் விற்பனை செய்பவர்களை கைது செய்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக, அமைந்தகரை (கே-3) காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் துறையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், நேற்று முன்தினம் சனிக்கிழமை அமைந்தகரை, ஷெனாய் நகர், மெட்ரோ ரயில் நிலையம் அருகே கண்காணித்தபோது, அங்கு ஒருவர் ரகசியமாக போதைப்பொருள் விற்பனை செய்து கொண்டிருந்தது உறுதி செய்யப்பட்டது.

அதன்பேரில், காவல் துறையினர் போதைப்பொருளை பதுக்கி வைத்து விற்பனை செய்து கொண்டிருந்த நைஜீரியா நாட்டைச் சேர்ந்த அஜாகு சினேடு ஒனாச்சி (47) என்பவரை கைது செய்து விசாரணை செய்தனர். மேலும் விசாரணையில் அஜாகு சினேடு ஓனாச்சி அளித்த தகவலின் பேரில் இவ்வழக்கில் தொடர்புடைய இவரது மனைவி எஸ்மெல்சியா மிகாஷ் (எ) லியோனி (50), அமேசியோன் இனலெக்வு (40) ஆகியோரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடமிருந்து 1 கிலோ கொக்கைன் போதை பொருள், ரொக்கம் ரூ.2 லட்சம் மற்றும் 6 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட 3 நபர்களும் விசாரணைக்குப் பின்னர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர், என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அனந்தமங்கலம் ஆஞ்சநேயர் திருக்கோயிலில் 17 ஆண்டுகளுக்குப் பிறகு மஹா கும்பாபிஷேகம்



**தரங்கம்பாடி : ஜன. 22,**
**மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, காழியப்பநல்லூர் ஊராட்சி, அனந்தமங்கலம் கிராமத்தில் இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான பழைமை வாய்ந்த அருள்மிகு செங்கமலவல்லி தாயார் சமேத ராஜகோபால சுவாமி கோவில் உள்ளது.**

இக்கோயிலில் ஸ்ரீ திரிநேத்ர தசபுஜ வீர ஆஞ்சநேயர் மூன்று கண்களையும், பத்துக் கரங்களையும் கொண்டு அந்தக் கரங்களில் எல்லாம் சங்கு, சக்கரம், வில், அம்பு, சூலம் போன்ற ஆயுதங்களை ஏந்தி, முதுகின் இருபக்கமும் கருடனுக்குரிய சிறகுகளோடு காட்சித் தருகிறார். ஆஞ்சநேயர் இதுபோன்ற திருமேனி உலகில் இங்கு மட்டுமே உள்ளது என்பது சிறப்பு.

மேலும் ஆஞ்சநேயர் இலங்கையில் உள்ள அரக்கர்களை சம்ஹாரம் செய்துதிரும்பிவரும்வழியில் கடலோரம் இயற்கைச் சூழ்ந்த இடத்தில் இறங்கி ஆனந்தமாய் தங்கியிருந்த இடம்தான் இந்தத் தலம் என்றும் அதனாலேயே இது ஆனந்தமங்கலம் என்று அழைக்கப்பட்டு தற்போது மறுவி அனந்தமங்கலம் என்று அழைக்கப்படுகிறது என்பது தலவரலாறு. எனவே இங்குள்ள ஆஞ்சநேயரை வழிபட்டால் சிவன் திருமால், பிரம்மா, ஸ்ரீராமர், இந்திரன், ருத்ரன், கருடாழ்வார் ஆகிய அனைவரையும் வழிபட்ட பலன் கிடைக்கும் என்பது ஐதீகம். இத்தகைய சிறப்பு மிக்க இவ்வாலயத்தில் 17 ஆண்டுகளுக்குப் பிறகு கும்பாபிஷேகம் செய்வதற்காக திருப்பணிகள் செய்து முடிக்கப்பட்டது.

தொடர்ந்து ஐந்து கால யாகசாலை பூஜை ஞாயிற்றுக்கிழமை காலை நிறைவுற்று, பூர்ணாவதி மேற்கொள்ளப்பட்டு மேள வாத்தியங்கள் முழங்க கடம் புறப்பாடு நடைபெற்றது. அதனை அடுத்து ராமன், லட்சுமணன், சீதை, திரிநேத்ர தசபுஜ வீர ஆஞ்சநேயர் உள்ளிட்ட சுவாமிகள் முன் செல்ல கடமானது மேளதாளம் மங்கள வாத்தியம் முழங்க ஆலயத்தை சுற்றி வலம் வந்தது. பின்னர் யாகசாலையில் வைத்து பூஜிக்கப்பட்ட புனித நீர் கோபுர கலசங்களுக்கு ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது தொடர்ந்து விமான கலசங்களுக்கு மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

இதில் அதிமுக மாவட்ட செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான எஸ். பவுன்ராஜ், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் சாமிநாதன், துணைத் தலைவர் காஞ்சனமாலாசேகர், மாவட்ட அறங்காவலர் சிவலிங்கம், அறநிலையத்துறை துணை ஆணையர் முத்துராமன், செயல் அலுவலர் முருகன், ஆய்வாளர் பத்ரி, செம்பை ஒன்றிய பெருந்தலைவர் நந்தினி ஸ்ரீதர், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் துளசிரேகாரமேஷ் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

# திருவேற்காடு நகராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம்



**திருவேற்காடு : ஜன. 22,**
**திருவள்ளூர் மாவட்டம், திருவேற்காடு நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 1, 2, 11, 12, 13, 14 ஆகிய வார்டுகளுக்கான மக்களுடன் முதல்வர் திட்ட முகாம், திருவேற்காடு, சிவன் கோவில் சாலையில் உள்ள பிரேமாதாஸ் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.**

இதில், தமிழ்நாடு மின்சார வாரியம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சித்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, வாழ்வாதாரக் கடன் உதவிகள், காவல்துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்ந்த சேவைகளுக்கான பொதுமக்களின் கோரிக்கைகள் பெறப்பட்டு மனுக்களைப்பெற்று உரிய தீர்வுகள் வழங்கப்பட்டன.

முன்னதாக, இந்த நிகழ்வினை ஆவடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சா.மு.நாசர், திருவேற்காடு நகராட்சி, நகர மன்ற தலைவர் என்.இ.கே.மூர்த்தி முன்னிலையில் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்வில் திமுக மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.ஜே. பவுல் மற்றும் 1வது வார்டு உறுப்பினர் சாந்தி ராஜா, 2வது வார்டு உறுப்பினர் ஆஷா ஆசீர்வாதம், 11 வது வார்டு உறுப்பினர் கடலை ஜானகி, 12வது வார்டு உறுப்பினர் இளங்கோ, 13வது வார்டு உறுப்பினர் காஞ்சனா இளையராஜா, 14 வது வார்டு ரமேஷ் ஆனந்தி, லயன் ரமேஷ் மற்றும் திருவேற்காடு நகராட்சியின் சுகாதார ஆய்வாளர் ஆல்பர்ட் அருள்ராஜ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டு பொதுமக்களின் குறைகளை கேட்டு அறிந்து கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதாக கூறியுள்ளனர்.

# இளம் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு போட்டிகள்



**காரைக்கால் : ஜன. 22,**
**காரைக்கால்மாவட்டத்தில் வருகின்ற ஜனவரி 25.ஆம் தேதி நடைபெற உள்ள தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு வாக்காளர்களுக்கும், இளம் வாக்காளர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில்பல்வேறுபோட்டிகள் நடைபெற்று வருகின்றன.**

2024-லில் இந்தியாவில் நடக்கவிருக்கும்நாடாளுமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு பொதுமக்களுக்கு தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் அனைவரும் வாக்களிக்கவேண்டும்என்பதை வலியுறுத்தியும் வண்ணக் கோலபோட்டிகள்காரைக்கால் கடற்கரை சாலையில் நடைபெற்றது. ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரியின் பேராசிரியர் முனைவர்.ஷெர்லி, பெருந்தலைவர் காமராஜர் பொறியியல் கல்லூரியின் பேராசிரியர் பிரவீன் குமார், ஞானமுருகன் தலைமையில் நடைபெற்றன.இந்தபோட்டியில் வெற்றி பெற்றவர்களை நடுவர்கள் தேர்வு செய்தனர்.

காரைக்கால் கடற்கரைக்கு பிரான்சிலிருந்துவந்த சுற்றுலா பயணிகள் நடைபெற்ற கோலப் போட்டியை பார்த்து கலை நயத்தையும்,இந்த போட்டியில் பங்கு பெற்ற மாணவ மாணவிகளையும் இதற்காக பாடுபட்ட காரைக்கால் மாவட்ட தேர்தல் துறை அனைத்து அதிகாரிகளையும் வாழ்த்தினர். இந்நிகழ்ச்சியின் அனைத்து ஏற்பாடுகளையும் மதர்தெரசா செவிலியர் கல்லூரி முதல்வர் ஜெயஸ்ரீ மற்றும்பிரியா செய்திருந்தனர். இந்தநிகழ்ச்சிக்கு காரைக்கால் மாவட்ட தேர்தல் துறை அதிகாரிகள் மற்றும் ஸ்வீப் ஒருங்கிணைப்பாளர் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் பங்கு பெற்றனர்.



காந்திய கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் காந்திய இரவு நினைவு அருங்காட்சியத்தில் 13வது பட்டமளிப்பு விழா நடைபெற்றதுஇந்த விழாவிற்கு காந்தி நினைவு அருங்காட்சியம் பொருளாளர் செந்தில் குமார் தலைமுறை ஆற்றினார். மதுரை காமராஜர் பல்கலைக்கழக துணைவேந்தர் குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார்.மேலும் காப்பாற்றிய பொறுப்பு நடராஜன் ஹர்ஷா வித்யா குருகுலம் ஆனைகட்டி கோவை அறங்காவலர் ஸ்வாமி ஜகதாத்மானந்த ஸரஸ்வதி, செயலாளர் நந்தாராவ் பாண்டியன் இலக்கிய சங்க தலைவர் சந்திர பிரபு வருகை ஆசிரியர் வெங்கடேஸ்வரன், வருகை யோகா ஆசிரியை நந்தினி, ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஸ்ரீ பொன்னியம்மன் கோயில் கும்பாபிஷேக விழா



**செங்கல்பட்டு : ஜன. 22,**
**செங்கல்பட்டு மாவட்டம், இடைக்கழிநாடு பேரூராட்சி விளம்பூர் கிராமத்தில் புதிதாக எழுந்தருளி உள்ள ஸ்ரீ அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகி ஸ்ரீ பொன்னியம்மன் கோயிலின் கும்பாபிஷேக விழா வெகு விமர்சையாக நடந்தது.**

இந்த கும்பாபிஷேக விழாவானது கடந்த 15ஆம் தேதிகணபதிபூஜை, லட்சுமி பூஜை, நவகிரக பூஜை, கோ பூஜை, பூரணாதி, பூஜைகள் நடைபெற்றது. அதனை தொடர்ந்து நேற்று காலை 7 மணி அளவில் கோ பூஜை, நான்காம் கால யாக பூஜை, பூரணாதி உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றது. தொடர்ந்து காலை 9.30 மணி அளவில் யாகசாலையில் வைத்து பூஜிக்கப்பட்ட புனித நீரை சிவாச்சாரியார்கள் மேளதாளங்கல் முழங்க கோயிலை வளம் வந்து வேத மந்திரங்கள் முழங்க ராஜகோபுரத்தில் உள்ள கலசங்களுக்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் செய்து வைத்தனர். மேலும் மூலவருக்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து மகா அபிஷேகம் மற்றும் அலங்காரம் செய்து தீபாரதனை நடைபெற்றது. இதில் சுற்றுவட்டார பகுதிகளிலிருந்து ஆயிரம் பக்தர்கள் கலந்து கொண்டு சமை தரிசனம் செய்தனர்.

# கோட்டுச்சேரி அன்னை அபிராமி தேசிய மேல்நிலைப் பள்ளி பதினெட்டாம் ஆண்டு விழா



**கோட்டுச்சேரி : ஜன. 22,**
**காரைக்கால், கோட்டுச்சேரி அன்னை அபிராமிதேசியமேல்நிலைப் பள்ளியில் பதினெட்டாம் ஆண்டு விழா பள்ளி வளாகத்தில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.**

விழாவிற்கு சிறப்பு விருந்தினராக நெடுங்காடு கோட்டுச்சேரி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் சந்திர பிரியங்கா கலந்து கொண்டு மாணவர்களின் பல்வேறு திறமைகளை பாராட்டி பரிசுகள் வழங்கினார்கள் இவ்விழாவில் பள்ளியின் தாளாளர் மாரியப்பன், கடந்த ஆண்டு பத்தாம் வகுப்பில் முதல் மதிப்பெண் பெறச் செய்த ஆசிரியருக்கு ரூபாய் 10 ஆயிரம் மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார். மேலும் காரை மாவட்டத்திலும் புதுவை மாநிலத்திலும் பல்வேறு போட்டிகளில் பரிசுகள் பெற்ற மாணவர்களுக்கும் அவரது பெற்றோர்களுக்கும் நன்றி பாராட்டினார்.

இவ்விழாவில் அன்னை அபிராமி பேரா. மெடிக்கல் கல்லூரியின் முதல்வர் சுரேஷ் கண்ணா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை பள்ளியின் துணை முதல்வர் நித்தியா முரளிதாஸ் மற்றும் அனைத்து ஆசிரியர்களும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். இறுதியில் மாணவர்கள் மனித நேயத்தை உணரும் விதமாக மாற்றுத்திறனாளி ஒருவருக்கு மூன்று சக்கர சைக்கிளினை ரஜினி மாரியப்பன் வழங்கப்பட்டது. இவ்விழாவில் பள்ளி மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை பெற்றோர்களும் ஊர் பொதுமக்களும் கண்டுகளித்து பாராட்டினர்.

# பள்ளிகளுக்கு இடையிலான சேலஞ்சர்ஸ் அகாடமி நடத்திய சதுரங்கம் மற்றும் கேரம், போட்டிகள்



**செங்கல்பட்டு : ஜன. 22,**
**செங்கல்பட்டுமாவட்டம், சிங்கப்பெருமாள் கோவில் அடுத்த தெள்ளிமேடு கிராமத்தில் டிகேவி நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி கடந்த 20 ஆண்டுகளாக இப்பகுதியில் செயல்பட்டு கொண்டிருக்கிறது. இதன் கிளை பள்ளி காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் தாலுகாவில் அமைந்துள்ள தத்தனூர் கிராமத்தில் உள்ளது.**

இப்பள்ளியின் தாளாளர் டாக்டர் விஜயகுமார் பள்ளி மாணவர்களை ஊக்கப்படுத்துவதில் வல்லவர். மாணவ மாணவிகளை கல்வியில் மட்டுமல்லாது, விளையாட்டுகளிலும் சிறந்து விளங்க வேண்டும் என்று சிறந்த பயிற்சியாளர்களை கொண்டு சிலம்பம், கராத்தே, சதுரங்கம், கேரம், நடனம், பாடல் போன்றவை மாணவ மாணவிகளுக்கு திறமைகளை மேற்கொள்ளுமாறு பயிற்சி அளிக்கப்படுகிறது. இன்று பள்ளிகளுக்கு இடையிலான சேலஞ்சர்ஸ் அகாடமி மூலம் சதுரங்கம் மற்றும் கேரம், போட்டிகள் இந்த பள்ளியில் நடத்தப்பட்டது.

இதில் சுமார் 200 மாணவ மாணவிகள் கலந்துகொண்டு 50 விழுக்காடு மாணவ மாணவிகள் வெற்றி பெற்றனர். வெற்றி பெற்ற மாணவமாணவிகளுக்குபரிசு கோப்பை வழங்கப்பட்டது. மேலும் இப்போட்டியில் கலந்துக்கொண்ட அனைத்து மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. கல்வியில் சிறந்து விளங்கும் மாணவ மாணவிகளுக்கு ரூபாய் பத்தாயிரம், விளையாட்டில் சிறந்து விளங்கும் மாணவ மாணவியர்களுக்கு ஐந்தாயிரம் வழங்கப்படுகிறது.

இப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகள் கல்வியில் சிறந்து விளங்குபவர்களுக்கு வெளி மாநிலங்களுக்கு சுற்றுலாவாக பள்ளி செலவில் அழைத்து செல்லப்படுகிறது. மேலும் சுற்றுலா செல்லும் மாணவர் மாணவிகளை ரயில் மூலமாக அழைத்துச் செல்லப்படுகிறார்கள் பின்பு, வெளிமாநிலங்களுக்கு சுற்றுலா சென்று திரும்பி வரும் பொழுது விமானத்திலும் அழைத்து வரப்படுகிறார்கள். எங்கள் மாணவர்கள் கல்வியிலும் மற்ற துறையிலும் எதிர்காலத்தில் சிறந்து விளங்க வேண்டும் என்று நாங்கள் அவர்களை ஊக்கப்படுத்துவதற்கும் உற்சாகப்படுத்துவதற்கும் இத்தகைய சேவையை மன மகிழ்ச்சியுடன் அவர்களுக்கு அர்ப்பணிக்கிறோம் என்று இப்பள்ளி ஆசிரியர்களும் தாளாளரும் பெருமிதம் கொள்கிறோம் என்று மன நெகழ்ச்சியுடன் கூறுகிறார்கள்.

# பாக்கம் கிராமத்தில் அருள்மிகு ஸ்ரீ பாலாம்பிகை சமேத ஸ்ரீ ஆலிங்கனபாலீஸ்வர சுவாமி திருக்கோவில் மகா கும்பாபிஷேகம்



**ஊத்துக்கோட்டை : ஜன. 22,**
**பாக்கம் கிராமத்தில் 500 ஆண்டுகள் பழமை வாய்ந்த அருள்மிகு ஸ்ரீபாலாம்பிகை சமேத ஸ்ரீ ஆலிங்கனபாலீஸ்வர சுவாமி திருக்கோவிலின் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.**

திருவள்ளூர் மாவட்டம், திருநின்றவூர், தாமரைப்பாக்கம் நெடுஞ்சாலையில் உள்ளது பாக்கம் கிராமம் ஆகும். இக்கிராமத்தில் 500 ஆண்டுகள் பழமை வாய்ந்த பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ பாலாம்பிகை சமேத ஸ்ரீ ஆலிங்கனபாலீஸ்வர சுவாமி என்ற ஸ்ரீ தவக்கொழுந்தீஸ்வரர் திருக்கோவில் உள்ளது. அருணகிரிநாதர் மற்றும் பாம்பன் சுவாமிகள் பாடற்புராணம் பெற்றது இத்திருக்கோவில் ஆகும்.

இக்கோவிலில் பௌர்ணமி மற்றும் திங்கட்கிழமை, வெள்ளிக்கிழமை ஆகிய நாட்களில் சந்திராஷ்டமதோஷ நிவர்த்தி செய்து கொள்ள பூஜைகள் நடைபெறுகின்றது. எனவே, சந்திராஷ்டம தோஷ நிவர்த்தி ஸ்தலமாகவும், குரு ஸ்தலமாகவும் இக்கோவில் விளங்குவதாக பக்தர்கள் கூறுகின்றனர். இவ்வாறு சிறப்பு பெற்ற இக்கோவிலுக்கு 2006-ம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இக்கோவிலை பரம்பரை ஆலய தர்மகர்த்தா குடும்பத்தினர், கிராம பொதுமக்கள் மற்றும் விழா குழுவினர் புதுப்பித்து நேற்று காலை மகா கும்பாபிஷேகம் செய்து வைத்தனர். இதை முன்னிட்டு கலச ஸ்தாபனம், கோ பூஜை, லட்சுமி பூஜை, நவகிரக பூஜை உள்ளிட்ட பல்வேறு பூஜைகள், மகாபூர்ணாகுதி உள்ளிட்டவை நடைபெற்றது. பின்னர், நேற்று காலை மங்கள வாத்தியம் முழங்க திருநின்றவூர் பினாகபாணி குருக்கள், ஸ்ரீனிவாச குருக்கள், அருண்குருக்கள் தலைமையில் 30 பேர் கொண்ட சிவாச்சாரியார்கள் குழுவினர்கள் மணியம் விஸ்வநாதன் முன்னிலையில் புனித நீர் அடங்கிய கலசங்களை ஊர்வலமாக கொண்டு வந்தனர். மூலவர், விமான கோபுரங்களுக்கு, ராஜகோபுரங்களுக்கும் புனித நீர் ஊற்றி மகா கும்பாபிஷேகம் செய்தனர். மூலவருக்கு மகா அபிஷேகம், மகா அலங்காரம் உள்ளிட்டவை நடைபெற்றது. தூப தீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

கோவிலுக்கு வந்திருந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்கு அறுசுவை உணவு பரிமாறப்பட்டு அன்னதான நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், பாக்கம் சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த பல்வேறு கிராமங்களை சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பரம்பரை ஆலய தர்மகர்த்தா குடும்பத்தினர் மற்றும் பாக்கம் கிராம பொதுமக்கள், விழா குழுவினர்கள் சிறப்பாக செய்திருந்தனர். இன்று முதல் 48 நாட்கள் மண்டல அபிஷேக நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

# ஓர் அறிவார்ந்த மதம் – நூல் வெளியீட்டு விழா



**சென்னை : ஜன. 22,**
**இயற்பியல் துறை ஆராய்ச்சிப் பேராசிரியர் டாக்டர் வ.மாசிலாமணி எழுதிய “ஓர் அறிவார்ந்த மதம்” என்ற நூல் வெளியீட்டு விழா சென்னை ஒய்எம்சிஏ புத்தகக் கண்காட்சி சிற்றரங்கில் நடைபெற்றது.**

நூல் வெளியீட்டு விழாவில், கலை இலக்கியச் சிந்தனையாளர் இந்திரன், “கீழடி” புகழ் அகழாய்வு அறிஞர் அமர்நாத் ராமகிருஷ்ணா, முன்னணி விஞ்ஞானி டாக்டர் ஜி.பாஸ்கரன், நுண் கலை வல்லுனர் - விஞ்ஞானி ஆனந்தி, தொழிலதிபர் ஞானசேகரன், எழுத்தாளர் - கவிஞர், பெரியார் அறிவியல் மையத்தின் ஸ்ரீ குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். நிகழ்ச்சியின் நிறைவில், நூலாசிரியர் டாக்டர். வ.மாசிலாமணி ஏற்புரையாற்றினார்.

# குமராட்சி ஒன்றிய அதிமுக சார்பில் எம்.ஜி.ஆரின் 107 வது பிறந்தநாள் விழா



**காட்டுமன்னாரகோயில் : ஜன. 22,**
**கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் அருகே குமராட்சியில் பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி உத்தரவின் பேரில் எம்ஜிஆரின் 107 வது பிறந்த நாளை முன்னிட்டு அதிமுக சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.**

குமராட்சி கடைவீதியில் நடைபெற்ற கூட்டத்திற்கு கடலூர் கிழக்கு மாவட்ட செயலாளர் சிதம்பரம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் கே.ஏ.பாண்டியன் தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர்கள் வாசு.முருகையன், எம்.என்.சிவகுமார், ஜோதி பிரகாஷ், சுந்தரமூர்த்தி, நவநீதகிருஷ்ணன், நகரசெயலாளர்கள் எம்.ஜி.ஆர். தாசன், பூமாலை கேசவன், சங்கர், மாவட்ட ஆவின் துணைத் தலைவர் செந்தில்குமார், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க தலைவர் சுவாமிநாத சிவப்பிரகாசம், முன்னாள் தொகுதி கழக செயலாளர் கள்ளிப்பாடி சண்முகம், நகர துணை செயலாளர் ஹரிசக்திவேல், மல்லிகா, ஜானகிராமன், எள்ளேரிபிரபு, சண்முகவேல், செந்தில்குமார், சுந்தரமூர்த்தி, சசிகுமார், வெற்றிமணி, காமராஜ், செல்வகாந்தன், வேல்முருகன், தங்கசாமி, ஸ்ரீதர், வேல்முருகன், மாரிமுத்து, சௌந்தரராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஒன்றிய செயலாளர் பாலகிருஷ்ணன், ஒன்றிய அவைத் தலைவர் கோவிந்தராசு, ஒன்றிய அம்மா பேரவை இணை செயலாளர் இளஞ்செழியன் ஆகியோர் துவக்க உரை நிகழ்த்தினர். சிறப்பு அழைப்பாளர்களாக அமைப்புச் செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திருத்தணி கோ. அரி, தலைமை பேச்சாளர் பி செல்வராஜ், செயலாளர் பி.எஸ்.அருள், கே.எஸ்.கே. பாலமுருகன், மாவட்ட அவைத்தலைவர் குமார், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் காணூர் பாலசுந்தரம், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் துறை திருமாறன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். கூட்டத்தில் ஒன்றிய நகர கிளைக் நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். கூட்டத்தின் முடிவில் கிளை செயலாளர் மாரியப்பன் நன்றி கூறினார்.



வரலாறு உலகம்

# அடுக்குமாடி குடியிருப்பில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 10 பேர் உயிரிழப்பு



இஸ்ரேல் : ஜன. 22,
டமாஸ்கஸ்-இல் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடத்தை குறிவைத்து இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் பத்து பேர் உயிரிழந்தனர். முன்னதாக உயிரிழந்தோர் எண்ணிக்கை 6-ஆக இருந்த நிலையில், தற்போது 10-ஆக அதிகரித்து இருக்கிறது.

"இஸ்ரேல் நடத்திய ஏவுகணை தாக்குதலில் ஆறு பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் முழுமையாக சேதமுற்றது. பொதுமக்கள் வசித்து வந்த குடியிருப்பு கட்டிடம் தாக்கப்பட்டுள்ளது."

"தாக்குதல் நடத்தப்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மீட்பு பணிகளில் மேலும் சிலரது சடலங்கள் மீட்கப்பட்டன. இதன் காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை 10-ஆக அதிகரித்துள்ளது," என சிரியாவில் உள்ள மனித உரிமை ஆணையம் தெரிவித்து இருக்கிறது.

# அமெரிக்காவில் பனிப்புயலில் 61 பேர் பலி



**வாஷிங்டன் : ஜன, 22,**
**அமெரிக்காவின் பல்வேறு மாகாணங்களில் கடும் பனிப்பொழிவு நிலவி வருகிறது. பனிப்பொழிவுடன் பனிப்புயலும் வீசி வருகிறது.**

பனிப்புயலால் பல்வேறு பகுதிகளில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக டென்னிசி, ஓரிகன் ஆகிய மாகாணங்களில் பனிப்புயல் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், அமெரிக்காவில் வீசி வரும் பனிப்புயலில் இதுவரை 61 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், பலர் பனிப்புயலால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மீட்புப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

# வடகொரியாவின் சைபர் தாக்குதலுக்கு எதிராக ஒத்துழைப்பை அதிகரிக்கும் தென் கொரியா, அமெரிக்கா



**சியோல் : ஜன. 22,**
**வடகொரியாவின் சைபர் தாக்குதலுக்கு எதிராக அமெரிக்கா, தென்கொரியா இடையே காணொலிக்காட்சி மூலம் சந்திப்பு நடைபெற்றது.**

தென்கொரியா மற்றும் ஜப்பான் கடற்பகுதியில் வடகொரியா தொடர் ஏவுகணை மற்றும் அணு ஆயுத சோதனைகள் மூலம் பதற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. இதற்கு பதிலடியாக அந்த நாடுகள் அமெரிக்காவுடன் இணைந்து கூட்டுப்போர் பயிற்சியில் ஈடுபடுகின்றன.

இது தங்களுக்கு எதிரான போர் ஒத்திகை என கருதும் வடகொரியா இதனை உடனடியாக நிறுத்த வேண்டும் என எச்சரித்துள்ளது. அதன் ஒருபகுதியாக சமீபத்தில் தென்கொரியாவின் கடலுக்கடியில் ஹைல்-5-23 என்ற அணு ஆயுத சோதனையை வடகொரியா நடத்தியது.

இந்த நிலையில் வடகொரியாவின் சைபர் தாக்குதலுக்கு எதிராக அமெரிக்கா, தென்கொரியா இடையே காணொலிக்காட்சி மூலம் சந்திப்பு நடைபெற்றது. இதில் இரு நாடுகளின் வெளியுறவுத்துறை அதிகாரிகளும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

அப்போது வடகொரியாவின் ஏவுகணை மற்றும் அணு ஆயுத சோதனை, சைபர் தாக்குதல் போன்ற நடவடிக்கைகள் உலகளாவிய அமைதிக்கு அச்சுறுத்தலாக உள்ளதை இரு தரப்பு அதிகாரிகளும் ஒப்புக்கொண்டனர். எனவே சைபர் கிரைம் விசாரணைகள், தகவல் பகிர்வுகளை விரிவுபடுத்துதல் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு போன்றவற்றை ஒருங்கிணைக்க அவர்கள் ஒப்புக்கொண்டதாக அங்குள்ள ஊடகங்கள் கூறுகின்றன.

# அதிக விலைக்கு ஏலம் போன அர்னால்டின் கைக்கடிகாரம்



**ஆஸ்திரியா : ஜன. 22,**
**இந்தியா உட்பட உலகம் முழுவதும் கோடிக்கணக்கான ரசிகர்களை கொண்ட ஹாலிவுட்டின் முன்னாள் ஹீரோ, 76 வயதான அர்னால்ட் ஸ்வார்ஸ்னேக்கர். கலிபோர்னியா மாநில கவர்னராகவும் இருந்தவர் அர்னால்ட்.**

ஆஸ்திரியாவில், சுற்றுச்சூழல் மாசுபாடு குறித்த ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, தான் பயன்படுத்திய பொருட்களை ஏலத்தில் விட்டு, அதில் கிடைக்கும் தொகையை மாசுபாடுக்கு எதிரான முயற்சிகளுக்கு நன்கொடையாக அளிக்க சென்றார், அர்னால்ட். பயணத்தின் போது, தென் கிழக்கு ஜெர்மனியின் மியூனிச் நகர விமான நிலையத்தில் அவரது உடைமைகளில், உடைமை பட்டியலில் குறிப்பிடாத விலையுயர்ந்த கைக்கடிகாரம் ஒன்று இருந்ததை சுங்க அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

ஆடிமார்ஸ் பிக்கெட் எனும் சுவிட்சர்லாந்து நாட்டின் உயர்ரக கைக்கடிகார நிறுவனத்தால் அர்னால்டிற்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட அந்த கைக்கடிகாரம், சுமார் ரூ.23 லட்சம் (26,000 யூரோ) மதிப்புடையது. ஏலத்திற்கு கொண்டு செல்வதாக அர்னால்ட் கூறிய விளக்கங்களை ஏற்று கொள்ள மறுத்த சுங்க அதிகாரிகள், அவருக்கு 35,000 யூரோ அபராதம் விதித்தனர்.

அபராதத்தை செலுத்தியபிறகு அர்னால்ட் பயணத்தை தொடர அனுமதிக்கப்பட்டார். தொடர்ந்து, ஆஸ்திரியாவில் ஸ்டான்கில்வர்ட் ரிசார்ட் எனும் புகழ் பெற்ற தங்கும் விடுதியில் ஏலம் நடைபெற்றது. அர்னால்டின் கைக்கடிகாரம் சுமார் ரூ.2 கோடி 45 லட்சம் (2,70,000 யூரோ) தொகைக்கு ஏலம் போனது.

அங்கு நடந்த இரவு விருந்தில் கலந்துகொண்டு பேசிய அர்னால்ட், "உலகளவில் மாசுபாடு குறித்து நடைபெறும் போராட்டங்களால் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை நான் பார்க்கிறேன். நாம் இந்த விஷயத்தில் நீண்ட தூரம் வந்துவிட்டோம். தற்போது இப்பிரச்சனைக்கு தீர்வு காண பலர் முன் வருவது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. மாசுபாட்டிற்கு எதிரான என் போராட்டத்தில் இணைந்த அனைவருக்கும் என் நன்றி" என தெரிவித்தார். இந்த ஏல நிகழ்ச்சியில் மொத்தம் 1.31 மில்லியன் யூரோ வசூலானது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் 74 ஆயிரம் மாணவர்களின் கல்விக்கடனை ரத்து செய்த ஜோ பைடன்



**வாஷிங்டன் : ஜன. 22,**
**அமெரிக்காவில் சுமார் ரூ.41 ஆயிரம் கோடி அளவில் கல்விக்கடன் ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அமெரிக்காவில் கல்விக்கடன் வாங்கிய பலரும் அதனை திருப்பி செலுத்த முடியாமல் அவதிப்பட்டனர். எனவே இந்த கல்விக்கடனை ரத்து செய்யவேண்டும் என பலரும் கோரிக்கை விடுத்து வந்தனர். அதன்படி ஜனாதிபதி ஜோ பைடன் மாணவர்களுக்கு வழங்கிய கல்விக்கடனை ரத்து செய்வதாக தனது தேர்தல் வாக்குறுதியில் கூறியிருந்தார்.

இந்தநிலையில் சுமார் 5 பில்லியன் டாலர் (சுமார் ரூ.41 ஆயிரம் கோடி) கல்விக்கடனை ரத்து செய்வதாக ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார். இதன்மூலம் 74 ஆயிரம் பேர் பயனடைய உள்ளனர். இதில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் தற்போது ஆசிரியர், நர்சுகள் என அரசு ஊழியர்களாக பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

# இந்திய விமானத்தை பயன்படுத்த அனுமதி மறுத்த மாலத்தீவு அதிபர் : சிறுவன் உயிரிழப்பு



**மாலி : ஜன. 22,**
**மாலத்தீவுக்கு இந்திய அரசு டிரோனியர் விமானத்தை வழங்கியுள்ளது.**

மாலத்தீவு புதிய அதிபராக முகமது முய்சு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவர் இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டுள்ளதால் இரு நாடுகளுக்கு இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. மாலத்தீவில் இந்திய படை வீரர்கள் 88 பேர் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர். அவர்களை மார்ச் 15ம் தேதிக்குள் திரும்பப்பெறும்படி இந்தியாவுக்கு மாலத்தீவு அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அதே வேளை, மாலத்தீவுக்கு டிரோனியர் ரக விமானத்தையும் இந்தியா வழங்கியுள்ளது. இந்த விமானத்தை இந்திய வீரர்கள் இயக்கி வருகின்றனர். மாலத்தீவில் மருத்துவ மற்றும் பிற பயன்பாட்டிற்காக இந்த விமானம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில், இந்திய விமானத்தை பயன்படுத்த அதிபர் முகமது முய்சு அனுமதி மறுத்ததால் உடல்நலம் பாதிக்கப்பட்ட மாலத்தீவில் சிறுவன் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மாலத்தீவின் கபி அலிப் விலிங்இல்ஸ் என்ற பகுதியை சேர்ந்த 14 வயது சிறுவனுக்கு மூளையில் கட்டி இருந்துள்ளது. இதற்கான சிகிச்சை பெற்று வந்த சிறுவனுக்கு கடந்த வியாழக்கிழமை வலிப்பு ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து, சிறுவனுக்கு உடனடியாக மேல்சிகிச்சை அளிக்க தலைநகர் மாலியில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டுமென டாக்டர்கள் அறிவுறுத்தியுள்ளனர். இதனால், சிறுவனை அழைத்து செல்ல இந்தியா வழங்கிய டிரோனியர் விமானத்தை பயன்படுத்த அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. விமானத்தை பயன்படுத்த அதிபர் முகமது ஒப்புதல் அளிக்க வேண்டும் என்பதால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்தியா வழங்கிய விமானத்தை பயன்படுத்த அதிபர் ஒப்புதல் அளிக்கவில்லை என தகவல் வெளியாகியுள்ளது.

பின்னர், 16 மணிநேரத்திற்கு பின் சிறுவன் விமானம் மூலம் மாலிக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் சிறுவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய விமானத்தை பயன்படுத்த அதிபர் முகமது அனுமதி அளிக்காததால் சிறுவன் உயிரிழந்ததாக மாலத்தீவு உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அதேவேளை, விமானத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாகவே சிறுவனை உடனடியாக மாலிக்கு கொண்டு வர முடியவில்லை என விமான நிறுவனம் தெரிவித்துள்ளது.

# சீரான மனநிலை உள்ளவர்கள்தான் அதிபராக வேண்டும்

## டிரம்பை விமர்சிக்கும் நிக்கி



**அமெரிக்கா : ஜன. 22,**
**இவ்வருட இறுதியில் நடைபெறவுள்ள அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜனநாயக கட்சியை சேர்ந்த தற்போதைய அதிபர் ஜோ பைடனும், குடியரசு கட்சியை சேர்ந்த முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்பும் தீவிரமாக களம் இறங்கி வாக்குகளை சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.**

டொனால்ட் டிரம்ப் மீது சில மாநிலங்களில் வழக்கு விசாரணை நடைபெறுவதால், அவர் அதிபர் ஆவதில் சிக்கல்கள் எழலாம் என நம்பப்படுகிறது. எனவே, குடியரசு கட்சியின் மற்றொரு தலைவரும், முன்னாள் தென் கரோலினா கவர்னருமான நிக்கி ஹாலேயும் போட்டியில் இறங்கி வாக்கு சேகரித்து வருகிறார்.

இரு தினங்களுக்கு முன், டொனால்ட் டிரம்ப், நியூ ஹாம்ப்ஷயர் மாநிலத்தில் ஒரு பேரணியில் 2021 அதிபர் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் போது பாராளுமன்றத்தில் நடந்த வன்முறை சம்பவங்கள் குறித்து பேசினார். அப்போது பேசிய டிரம்ப், நிக்கி ஹாலேயின் பெயரை குறிப்பிட்டு பாராளுமன்றத்திற்கான பாதுகாப்பை நிக்கி சரிவர கையாளவில்லை என குற்றம் சாட்டினார்.

ஆனால், டிரம்ப் பேச முற்பட்டது அப்போதைய முன்னாள் சபாநாயகர் நான்சி பெலோசியை குறித்து என்பது பின்னர் தெளிவாகியது. பெயர்களை மாற்றி டிரம்ப் உரையாற்றியது விமர்சனத்திற்கு உள்ளானது. நிக்கி ஹாலே தனது எக்ஸ் கணக்கில் இது குறித்து பதிவிட்டுள்ளார். அதில் அவர் தெரிவித்திருப்பதாவது: ஒரு பேரணியில், 2021 அதிபர் தேர்தல் முடிவுகள் வெளியான போது நான் ஏன் பாதுகாப்பு ஏற்பாடுகளை சரிவர கவனிக்கவில்லை என டிரம்ப் குற்றம்சாட்டி பேசி உள்ளார்.

அப்போது நான் வாஷிங்டன் பகுதியிலேயே இல்லை. டிரம்ப், நான்சி பெலோசியை குறிப்பிட நினைத்து என் பெயரை பயன்படுத்தி விட்டார் என பிறகு நான் அறிந்தேன். ஆனால், அந்த உரையில் "நிக்கி ஹாலே" என தெளிவாக பல முறை என் பெயரைத்தான் அவர் பயன்படுத்தினார். கடும் அழுத்தத்தை தர கூடிய அமெரிக்க அதிபர் பதவியில் அமர மிக அதிகமான மன உறுதி வேண்டும். அந்த மன நிலை இல்லாதவர்கள் அப்பதவிக்கு வர கூடாது என்று நிக்கி பதிவிட்டுள்ளார்.

# உலகின் மிகப்பெரிய பனிப்பாறை வடக்கு நோக்கி நகர்கிறது



**இங்கிலாந்து : ஜன. 22.**
**1986-ம் ஆண்டு அண்டார்டிக் கடற்கரையில் இருந்து ஒரு பெரிய பனிப் பாறை பிரிந்தது. அது விரைவாக வெட்டல் கடலில் தரைதட்டி, ஒரு பனித் தீவாக மாறியது.**

உலகின் மிகப்பெரிய பனிப்பாறையான அதை ஏ23ஏ என்று அழைக்கப்படுகிறது. கிட்டத்தட்ட 4,000 சதுர கி.மீ. பரப்பளவுகொண்ட இந்த பல் வடிவ பனிப்பாறை, ஒருங்கிணைந்த லண்டன் நகரத்தைவிட இரண்டு மடங்கு பெரியது. அதன் தடிமன் 1,312 அடி ஆகும். இது அண்டார்டிகாவின் பில்ச்னர் பனிப்பரப்பில் இருந்து பிரிந்த பனிப்பாறைகளின் ஒரு பகுதியாகும்.

இந்த பனிப்பாறை கடந்த 2022-ம் ஆண்டு முதல் வேகமாக நகரத் தொடங்கியது. உலகின் மிகப்பெரிய பனிப்பாறை 30 வருடங்களை கடந்து முதல்முறையாக நகர்கிறது என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர். இந்த நிலையில் ஏ23ஏ பனிப்பாறை வடக்கு நோக்கி செல்வதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். அதன் இறுதிப் பயணமாக வடக்கு நோக்கி செல்கிறது. தற்போது யானைத் தீவு மற்றும் தெற்கு ஓர்க்னி தீவுகளுக்கு இடையே நகர்கிறது. இந்த பனிப்பாறை ஒரு டிரில்லியன் டன் தண்ணீரைக் கொண்டுள்ளது.

இதுகுறித்து இங்கிலாந்து அண்டார்டிக் சர்வேயின் ஆண்ட்ரூ பிளெமிங் கூறும் போது, "2020-ம் ஆண்டில் செயற்கைக்கோள் படங்கள் மூலம் நகருவது தெரிந்தது. கடந்த ஆண்டின் பிற்பகுதியில், ஏ23ஏ அதன் பனிக்கட்டிகளில் இருந்து விடுபட்டு வடக்கு நோக்கிச் செல்லத் தொடங்கியது" என்றார்.

# 50 வருடங்களுக்கு முன் பெற்ற மாற்று கிட்னி 108 வயதிலும் ஆரோக்கியம்




**பிரிட்டன் : ஜன. 22,**
**வடகிழக்கு இங்கிலாந்தில் உள்ள நகரம் ஹவுட்டன் லெ ஸ்ப்ரிங்.**

ஹவுட்டனில் வசித்து வருபவர் சூ வெஸ்ட்ஹெட். வெஸ்ட்ஹெட்டிற்கு தற்போது 108 வயது ஆகிறது. தனது 12-ஆவது வயதில் உடல்நலம் சரியில்லாமல் அவதிப்பட்ட வெஸ்ட்ஹெட்டிற்கு சிறுநீரக நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, 25-ஆவது வயதில் டயாலிசிஸ் செய்து கொள்ள தொடங்கினார்.

நீண்ட சிகிச்சைக்கு பிறகும் அவருக்கு நோய் தீரவில்லை. 1970களின் தொடக்கத்தில் வெஸ்ட்ஹெட்டிற்கு சிறுநீரகத்துறை சிகிச்சை நிபுணர்கள் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்கு பரிந்துரை செய்தனர். 1973ல் வெஸ்ட்ஹெட்டின் தாயார் ஆன் மெட்கால்ஃப் சிறுநீரகம் தர முன்வந்ததையடுத்து முறையான பரிசோதனைக்கு பின்னர் அறுவை சிகிச்சை நடந்து தாயாரின் சிறுநீரகம், வெஸ்ட்ஹெட்டிற்கு பொருத்தப்பட்டது. இந்த அறுவை சிகிச்சை ராயல் விக்டோரியா மருத்துவமனையில் நடந்தது.

அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தாலும், அடுத்த 5 வருடங்களுக்கு கூட தான் உயிருடன் இருக்க முடியும் என வெஸ்ட்ஹெட் அப்போது நம்பவில்லை. ஆனால், 50 வருடங்கள் கடந்தும், எந்தவிதமான சிறுநீரக சிக்கலும் இல்லாமல் ஆரோக்கியமாக வாழ்ந்து வருகிறார், வெஸ்ட்ஹெட். இந்த நிகழ்வு, தற்போது வெஸ்ட்ஹெட்டிற்கு உடல்நல மேற்பார்வையும் ஆலோசனையும் வழங்கி வரும் சண்டர்லேண்ட் ராயல் மருத்துவமனையில் கொண்டாடப்பட்டது.

மிகவும் மகிழ்ச்சியுடன் அங்கு வந்திருந்த வெஸ்ட்ஹெட்டுடன் உரையாடிய அங்குள்ள மருத்துவர்களும், செவிலியர்களும், மருத்துவமனை பணியாளர்களும் அவருக்கு வாழ்த்து தெரிவித்தனர். இந்நிகழ்ச்சியில் மக்கள் உறுப்பு தானம் செய்ய முன் வர வேண்டும் என மருத்துவர்கள் அறிவுறுத்தினர்.

# ஏமனில் ஹவுதி தளங்கள் மீது அமெரிக்கா தாக்குதல்

**வாஷிங்டன் : ஜன. 22,**
**இஸ்ரேல் ஹமாஸ் போரில் அமெரிக்காவும், பிரிட்டனும் இஸ்ரேலுக்கு ஆதரவு அளித்து வரும் நிலையில், ஹமாஸ் படையினருக்கு ஏமனில் உள்ள ஹவுதி அமைப்பும், லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பும் ஆதரவு அளித்து வருகின்றன.**

செங்கடலில் இஸ்ரேலுக்கு ஆதரவாக செல்லும் வணிக கப்பல்களை குறி வைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். ஹவுதியின் இந்த செயலுக்கு பதிலடியாக ஏமனில் உள்ள ஹவுதியின் இலக்குகள் மீது அமெரிக்கா, பிரிட்டன் ராணுவங்கள் 6வது நாளாக தாக்குதல் நடத்தியது. சரக்கு கப்பல்களை தாக்கி அழிக்கும் ஏவுகணைகளை செலுத்த ஏமனில் உள்ள ஹவுதி படை தளங்களின் மீது அமெரிக்க போர் விமானங்கள் குண்டுகளை வீசி தாக்கின.

# ஈராக்கில் அமெரிக்க ராணுவ தளம் மீது ஏவுகணை தாக்குதல்



**ஈராக் : ஜன. 22,**
**மேற்கு ஈராக்கில் அல் அசாத் விமான தளம் உள்ளது. இங்கு அமெரிக்க ராணுவ வீரர்கள் தங்கியிருந்து பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.**

அல்-அசாத் விமான தளம் மீது ஏவுகணைகள் வீசப்பட்டு தாக்குதல் நடந்தது. இந்த தாக்குதலில் அமெரிக்க ராணுவ வீரர்கள் சிலர் காயம் அடைந்தனர். இதுகுறித்து அமெரிக்க ராணுவம் கூறும்போது, மேற்கு ஈராக்கில் உள்ள அமெரிக்க படைகளின் தளத்தின் மீது ஏவுகணைகள் வீசப்பட்டன. பெரும்பாலான ஏவுகணைகள், வான் பாதுகாப்பு அமைப்புகளால் இடைமறிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

ஆனால் சில ஏவுகணைகள் ராணுவ தளம் மீது விழுந்தது. ஈரானின் ஆதரவு பெற்ற அமைப்புகளால் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்தது.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# சேலத்தில் திமுக இளைஞரணி 2-வது மாநில மாநாட்டில் உதயநிதி பேச்சு

# அரிச்சல்முனை கடற்கரையில் பிரதமர் மோடி மலர் தூவி வழிபாடு





# ராம பக்தர்கள் தங்க அயோத்தியில் நவீன கூடாரங்கள்


சென்னை / புதுக்கோட்டை | 22.01.2024 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்